Salary for employees of State Transport Department

* 489 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether any section of the employees of the State Transport Department have not been paid the salary for January, February and March 1971; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

Madras-Tirupathy Bus Service

* 490 Q.—THIRU N. DENNIS: Will the Hon. he Minister for Transport be pleased to state whether the State Transport Services have been affected in any way by the introduction of a fast-moving train between Madras City and Tirupathy?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. இ. எஸ். தியாகராசன்: திருப்பதிக்குச் செல்லும் எக்ஸ்ப்ரஸ் பஸ்களில் இப்போது நெரிசல் இருப்பதால் மேலும் இரண்டு பஸ்கள் விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திருப்பதிக்கு அதிக பஸ்கள் விடுவதற்காக இப்போது ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த போக்குவரத்து அமைச்சரோடு இதுபற்றி பேசி இங்கு எவ்வளவு மைல்கள் ஓடுகிறதோ அந்த அளவிற்கு பஸ்களை அதிகப்படுத்தி ஆந்திரப் பகுதியில் ஓட்டுவதற்கான ஒரு ஒப்பந்தம் இப்போது தயாராக இருக்கிறது. ஆகவே அதன் மூலம் அதிக பஸ்கள் விடும் வாய்ப்பிருக்கிறது.

ஓட்டுநர்களிடம் பேருந்துப்பொறுப்பை ஒப்படைத்தல்

* 491. வினு—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

ஓட்டுநர் இருவரிடம் ஒவ்வொரு பேருந்தின் பொறுப்பும் ஒப்படைக்கப் படும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வலவர்கள் இருவரின் பொறுப்பில் ஒரு பேருந்தை ஒப்படைக்கும் முறைமை தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறையின் செயற்குறிப்பில் இருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, தற்போது அரசாங்கப் பேருந்து களில் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு டிரைவர்களை மாற்றிக்கொண்டு இருக் கிறார்கள். அதனுல் அவர்களுக்கு பஸ்ஸின் மேல் இருக்கும் பொறுப்பு குறைந்து விடுகிறது. என்னென்ன மாதிரி தவறு நடந்து இருக்கிறது என்று அடுத்த நாள் அவர்கள் பொறுப்பேற்காததால் கவனிக்காமல் விட்டு விடுகிருர்கள். அதோடு ஒரு வண்டியிலிருந்து இன்னொரு வண்டிக்கு ஸ்பேர் பார்ட்ஸ் எடுத்துப் போடுகிருர்கள். ஆகவே, இவைகளை நீக்கும் வகையில்,

அந்த டிரைவர்கள் பொறுப்பாக செயல்படும் வகையில் ஒவ்வொரு டிரைவருக்கும் ஒரு பஸ் ஒப்படைப்பதன் மூலம் நல்லபடி அந்த நிர்வாகத்தை நடத்தலாம் என்பதை அரசு தெரிந்து கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தை ஒட்டித்தான் இரண்டு டிரைவர்களிடத்தில் ஒரு பஸ் ஒப்படைப்பது என்று அரசாங்கம் ஒரு திட்டத்தை பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. அதிலே ஒவ்வொரு ரூட்டுக்கும் ஒரு பஸ் இருக்கிறது. ஆகவே வேறு ரூட்டில் டிரைவர்கள் மாற்றம் செய்யும்பொழுது அந்த பஸ்களை வேறு ஒருவரிடத்தில் ஒப்படைக்கப்படுகிறது. வண்டிகள் பழுதடைந்து விடும் போதும் டிரைவர்களை வேறு இடத்திற்கு மாற்றவேண்டியிருக்கிறது. ஆனால் முதல் கட்டமாக சென்னை மாநகரத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் கிட்டத்தட்ட அரசு பஸ்களே அதிகமாக ஓடுவதால், அங்கே இருக்கும் டிரைவர்களுக்கு அவர்களுடைய சர்வீஸ் வரைக்கும், அவர்களுக்கே அந்த பஸ்ஸை ஒப்படைக்கும் திட்டத்தை அமுல் நடத்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. நா. வீராசாமி : பேரவைத் தலைவரவர்களே, டிரைவர்களிடத்தில் பஸ்ஸை ஒப்படைக்கும் செயற்குறிப்பு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பஸ்ஸை ஒப்படைத்தால் மட்டும் போதாது. அந்த பஸ்ஸுக்கு வேண்டிய ஸ்டெப்னி, ஸ்பேனர்கள் முதலியவைகள் ஒப்படைத்தால்தான் நீண்ட தூரம் செல்லும் பஸ்களில் பழுது அடைந்து விட்டால் பழுது பார்க்க முடியும். இப்படிப்பட்ட கருவிகள் ஒப்படைப்பது பற்றி அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நீண்ட தூரப் பேருந்துகளுக்கு இப்படிப்பட்ட கருவிகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. 10 பஸ்ஸுக்கு ஒரு மெயின்டனன்ஸ் குரூப் என்று போட்டு, 10 பஸ்ஸுக்கான 20 டிரைவர்கள் என்ற வகையில் ஒரு குழு அமைப்பது என்று அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது.

கோயில் அறங்காவலர் நியமனத்தில் உச்சவரம்பு

*492. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோயில்களுக்கு அறங்காவலர் நியமிப்பதில் உச்சவரம்பு நிர்ணயிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தமிழ்நாடு 1959-ம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் 47-வது பிரிவின் கீழ் பட்டியல் படுத்தப்பட்ட நிறுவனங்கள் தொடர்பாக மூன்று பேர்களுக்கு குறையாமலும் ஐந்து பேர்களுக்கு மேற்படாமலும் அறங்காவலர் குழு ஒன்றை அமைக்க ஆணையாளர் தகுதிபடைத்த அதிகாரியாவார். 49-வது பிரிவின்கீழ் பட்டியல் படுத்தப்படாத நிறுவனங்கள் தொடர்பாக உதவி ஆணையாளர் மேற்கூறியவாறு அறங்காவலர் குழுவை அமைக்கலாம். அவர் ஒரேவொரு அறங்காவலரையும் நியமிக்கலாம். ஐந்து அறங்காவலர்கள் என்றும் வரையறை நியமன அறங்காவலருக்குப் பொருந்தும். இப்போதுள்ள விதித்துறையில் மாறுதல் ஏதும் செய்யக் கருதப்படவில்லை.